# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No. 334/2022 | Deposition of Witness for : PW2 |
| Name : நவீன்குமார் | Father/Husband Name : செல்லதுரை |
| Age : 24 | Village : பெருமாள்குளம் |
| Taluk : சாத்தான்குளம் | Calling : சந்தையில் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27 May 2025

Accused absent. Petition U/s. 355 BNSS filed and allowed.

**<u>முதல் விசாரணை</u> :-**

1. நான் பெருமாள்குளத்தில் குடியிருந்து சந்தையில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும் அவரிடம்தான் நான் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை சம்பவத்தின்போது தெரியும். கடந்த 25.07.2022 ம் தேதி அ.சா.1 ன் TATA ACE வாகனத்தில் ஏரல் சந்தையில் வியாபாரம் முடித்து சுமார் 11.00 மணியளவில் வெள்ளமடம் தாண்டி முத்துநகர் பக்கம் வந்து கொண்டிருந்தோம். என்னுடன் கிருஷ்ணமூர்த்தி, அ.சா.1 மற்றும் முத்துலிங்கம் ஆகியோர் என்னுடன் வாகனத்தில் வந்தார்கள்.

2. அப்போது எதிரிகள் அனைவரும் ரோட்டில் எங்கள் வாகனத்தை வழிமறித்து அ.சா.1 ஐ பார்த்து எந்த ஊர் என்று கேட்டார்கள். அதற்கு அ.சா.1 பேய்குளம் பக்கம் பெருமாள்குளம் என்று கூறினார். பெருமாள்குளம் என்றால் நீ சாணாபயதானே என்று பேசி இந்த ஊர் பக்கமாக வண்டியை ஓட்டிக் கொண்டு வரக்கூடாது, வண்டியை விட்டு இறங்கு என்று கூறி தேவடியா மக்களே என்று ஆபாசமாக பேசினார்கள். அ.சா.1 வண்டியை விட்டு கீழே இறங்கினார். அவரை துரை மற்றும் மற்ற எதிரிகள் சேர்ந்து கல்லால் தலையின் பின்பக்கம் அடித்தார்கள். மற்றும் அவரை கீழே தள்ளிவிட்டு எதிரிகள் அனைவரும் அ.சா.1 ன் விலா எலும்பு மற்றும் இடது காலில் காலால் மிதித்தார்கள். என்னையும் செவிட்டிலும் முதுகிலும் 1 வது எதிரி துரை என்பவர் அடித்தார். வண்டியின் முன்பக்க கண்ணாடியையும் உடைத்தார்கள். இடது பக்க கார் கதவையும் உடைத்தார்கள். வண்டியில் இருந்த காய்கறி மற்றும் தராசு ஆகிவற்றை கீழே இழுத்து போட்டார்கள். என்னுடன் வந்த மற்றவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் அனைவரும் சென்றுவிட்டார்கள். இந்த சம்பவத்தில் அ.சா.1 ன் செல்போன் மற்றும் என்னுடன் வந்த கிருஷ்ணமூர்த்தி என்பவரின் செல்போனையும் எடுத்து கொண்டு சென்று விட்டார்கள். இதுசம்பந்தமாக அ.சா.1 புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை இல்லை.</u>**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V — Digitally signed by DEVI RAKSHA M V Date: 2025.05.27 17:57:25 +0530

Judicial Magistrate, Sathankulam.